பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 21 ஞாயிற்றுக்கிழமை 05.01.2025 கதிர் 059

# இந்திய நிறுவன மின் திட்டத்தை மீளாய்வு செய்ய மற்றொரு குழு

## நியமிக்க எரிசக்தி அமைச்சு முடிவு

இந்தியாவைச் சேர்ந்த அதானி நிறுவனத்தினால் இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ளவலுச்சக்திதிட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக மற்றொரு குழுவை நியமிப்பதற்கு எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கான யோசனையொன்று அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதானியின் எரிசக்தி திட்டங்களுக்காக மதிப்பட்ட செலவுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இக்குழுவின் ஊடாக ஆராயப்படவுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக அதானி குழுமம் இலங்கையில் செயற்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த காற்றாலைத் திட்டம் தொடர்பாக ஆராய்வதற்கென்று ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மன்னார், பூநகரி பகுதிகளில் உற்பத்தி செய்வதற்குதிட்டமிடப்பட்டிருந்தகாற்றாலை மற்றும் சூரிய மின்கல மின்னுற்பத்தித் திட்டங்கள்தொடர்பில்மீளாய்வுசெய்வதற்கே இந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.



## இனி இது ரகசியம் அல்ல!

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைக் குழுக் கூட்டம் இன்றைக்கு வவுனியாவில் நடக்க இருக்கிறது. அதுவே இந்தக் கூட்டணியின் இறுதிக் கூட்டமாக இருக்கும் என்று நேற்று உள்வீட்டுத் தகவல்கள் உறுதியாகக்கூறின.

இந்தக் கூட்டணியில் இருந்து வெளியேறுவது என்கிற உறுதியான முடிவுக்கு புளொட் வந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது. அந்த முடிவை மற்றைய பங்காளித் ☞ 2

## சமையல் வாயு விலையில் திருத்தமில்லை

சமையல் எரிவாயு விலையில் இந்த மாதம் திருத்த எதுவும் இருக்காது என்று லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மாதாந்தஎரிவாயுவிலைசூத்திரத்துக்கு அமைய 2024 டிசெம்பர் மாதம் லிற்றோ சமையல் எரிவாயுவின் விலை திருத்தம் செய்யப்படவில்லை. நவம்பர் ☞ 2

## ரோஹிங்யா அகதிகளை நாடு கடத்தவேண்டாம்

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்

இலங்கையில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்யா அகதிகளை நாடு கடத்த வேண்டாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்காவுக்கு அனுப்பியுள்ளகடிதத்தில்இதுதொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது:

2024 டிசெம்பர் 19 மீனவர்களால் மீட்கப்பட்டு ஆளும்தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டபின்னர் முல்லைத்தீவு விமானப்படை தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியா அகதிகளை நாடு கடத்த ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது ☞ 2

## சமூக வலைத்தளப் பதிவுகளால் மனநலச் சிகிச்சை பெற்ற எம்.பி.

### நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவிப்பு

சமூகவலைத்தளங்களில்வெளியிடப்பட்ட பொய்யானமற்றும்அவமதிக்கும்பதிவுகளால், நாடாளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சி கடும் மன உளைச்சலுக்கும் அசௌகரியத்துக்கும் உள்ளாகியுள்ளார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் அறிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மனநல மருத்துவ பிரிவில் சிகிச்சை பெறுமாறு விசேட வைத்தியர்கள் அவருக்குப் பரிந்துரைத்துள்ளனர் என்றும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 2

## நாடாளுமன்ற உயர் பதவிகளுக்கு வெளியாட்களை நியமிக்க எதிர்ப்பு

நாடாளுமன்றத்தின் உயர் பதவிகளுக்கு வெளியில் இருந்து அதிகாரிகளை நியமிக்கும் யோசனைக்கு நாடாளுமன்ற ஊழியர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் பணியாற்றும் ☞ 2

## யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் எலிக் காய்ச்சல் காரணமாக இறப்பு

எலிக்காய்ச்சல்காரணமாகயாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த இரண்டாம் திகதி இரண்டு இறப்புக்கள் பதிவாகியுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலே ☞ 2

## மீனவருடன் கலந்துரையாடியே புதிய கடற்றொழில் சட்டம்

### அமைச்சர் சந்திரசேகர் உறுதியளிப்பு

மீனவர்களுடன் கலந்துரையாடி பின்னரே புதிய கடற்றொழில் சட்டம் கொண்டுவரப்படும் என்று துறைசார் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர்கள் சம்மேளனங்களின் சமாசத்தினருடன் நடத்திய கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடற்றொழில் சட்டமொன்று நாட்டுக்கு அவசிமாகின்றது. நிச்சயமாக அந்தச் சட்டம் கடற்றொழிலாளர்களைப் பாதுகாப்பதாகவே அமையும். விசேடமாக, இலங்கையில் இருந்து அதிகளவான கடல் உற்பத்திப் பொருட்களை ஐரோப்பியநாடுகளே பெற்றுக்கொள்கின்றன. ஆகவே அந்த நாடுகளின் முன்மொழிவுகள் சிலவும் இருக்கின்றன. அந்த நாடுகளுடன் நாங்கள் ஏற்கனவே ஒப்பந்தங்களையும், இணக்கப்பாடுகளையும் செய்துள்ளோம். ஆகவே அவர்களின் முன்மொழிவுகளையும் கவனத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது.

அந்தவகையில் அவர்களின் முன்மொழிவுகள் மற்றும் ஏனைய விடயங்களையும் உள்ளடக்கிய புதிய கடற்றொழில் சட்டமானது உங்களுடன் கலந்துரையாடப்பட்டு உங்களது அனுமதியுடன் தான் கொண்டுவரப்படும்.

கடற்றொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஆக்கிரமிப்புக்களைத் தடுப்பதற்காக நாம் கடுமையான அழுத்தங்களை வழங்குவதற்கு ஆளும்தரப்புஎன்றவகையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். அத்துடன் ஆக்கிரமிப்புக்கள் அத்துமீறல்களைத் தடுப்பதற்கு உங்களது ஒத்துழைப்பும் அவசியமாகின்றது. நாம் உங்களது வாழ்வாதாரம், பாதிக்கப்படுவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றோம்.

அதேபோன்று கடலட்டைப் பண்ணை செய்வதால் பாரம்பரிய கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்ப ☞ 7

## யாழ். மாவட்ட எம்.பி. இளங்குமரன் மீது பிரபல வர்த்தகர் பொலிஸில் முறைப்பாடு

### சுண்ணக்கல் விவகாரத்தில் அடாவடித்தனம் எனவும் குற்றச்சாட்டு

தமது வர்த்தக நிறுவனம் சட்ட ரீதியாகவேசுண்ணக்கல்வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றது எனவும், நாடாளுமன்றஉறுப்பினர்இளங்குமரன் உண்மையானவிடயங்கள்தெரியாமல் தமது வர்த்தக நிறுவனத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியதாகவும் சிற்றி வன்பொருள் வர்த்தக நிறுவனத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். அத்துடன் இச்சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தான் முறைப்பாடு செய்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் 65 வருட காலமாக கட்டடப் பொருள் வியாபாரத்தை நாம் ☞ 2

## மலையகத் தலைவர்கள் செய்துள்ள ஊழல்கள் அனைத்தும் வெளிவரும்

### தேசிய மக்கள் சக்தி எம்.பி. கலைச்செல்வி எச்சரிக்கை

இந்திய அரசு வழங்கிய வீடமைப்பு திட்டம் உட்பட மலையக தலைவர்கள் செய்த அனைத்து ஊழல்களும் வெகுவிரைவில் வெளிவரும் என்று எச்சரித்துள்ளார் தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி.

அவர் பொகவந்தலாவ பகுதியில் நேற்றையதினம் கட்சியின் பணியிடத்திறப்புவிழாவில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுடைய பிரச்சினைக்கான தீர்வுகள் கட்டம் கட்டமாக வழங்கப்படும். மலையக பெருந்தோட்ட பகுதியினை எடுத்து நோக்கினால் கல்வி, சுகாதாரம் மற்றும் வீதிகள் போன்ற பிரச்சினைகளுக்கு கடந்த ஆளும்தரப்புகள் தீர்வினைப் பெற்றுக்கொடுக்கவில்லை.

மலையகப் பெருந்தோட்ட மக்கள் 201 வருட காலமாக தொழிங்சங்கங்களுக்கு உள்வாங்கப்பட்டவர்கள். இருந்தும் இதுவரை ☞ 7

## 28 கோடி ரூபாய் பெறுமதியுடைய
## 11 கிலோ நிறையான தங்கத்துடன் கற்பிட்டிக் கடலில் நால்வர் கைது

கற்பிட்டி, பத்தலண்குண்டுவ கடற்பகுதியில் 11 கிலோ 300 கிராம் நிறையுடைய தங்கத்துடன் சந்தேகநபர்கள் மூவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ☞ 7

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தலைவர்களுக்குத் தெரிவித்துவிட்டு வெளியேறவே புளொட் இன்றைய கூட்டத்தில் பங்கெடுப்பதாகவும் கூறப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுவது, அதற்கு அந்தக் கட்சி மறுப்புத் தெரிவித்தால் தமது வெளிச்சவீட்டுச் சின்னத்தில் தனித்து நிற்பது என்பதே புளொட்டின் தெளிவான முடிவு என்பதை இன்றைய கூட்டத்தில் அது தெரிவிக்கும் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, ஆளும் தரப்புடன் பின் கதவு அரசியல் செய்பவர்கள் ரெலோவில் இருக்கும் வரையில் அவர்களுடன் சரிக்குச் சமமாக இருந்து பேசுவதிலோ, அரசியல் செய்வதிலோ, செய்தியாளர்கள் சந்திப்புக்களில் கலந்துகொள்வதிலோ தமக்கு உடன்பாடில்லை என்ற விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சியும் உறுதியாக இருக்கின்றது.

தமிழ் அரசுக் கட்சி தம்மை ஏற்றுக்கொள்ளாது என்கிற நிலையில் இந்தக் கூட்டணியில் புளொட்டைத் தக்கவைத்துக்கொள்வதற்கு ரெலோ விரும்புகின்றது. ஆனால், கடந்த பொதுத் தேர்தலின்போது புலம்பெயர் தமிழ் பெரு முதலாளி ஒருவர் தெற்கில் வாங்கிய ஒரு கட்சிக்கு விவசுவாசமாகச் செயற்படுவோம் என்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு அவரிடம் ரெலோ வேட்பாளர்கள் பணம் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கும் நிலையில் இந்தக் கூட்டணியில் தொடர்வது தமது அரசியலுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக இருக்கும் என்று புளொட் கருதுகின்றது. ஏனெனில் அதே புலம்பெயர் பெரு முதலாளியின் ஆட்கள் தமது உடன்படிக்கைப் பிரதியுடன் பொதுத் தேர்தலின்போது சித்தார்த்தனையும் அணுகியிருந்தனர். உடன்படிக்கையைப் படித்துப் பார்த்த பின்னர் தன்னால் கட்சிக்கும் மக்களுக்கும் அப்படியொரு துரோகத்தைச் செய்துவிடமுடியாது என்று சித்தார்த்தன் நிராகரித்துவிட்டார்.

கூட்டணிக்குள் இருக்கும் இரு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டு 'படம் காட்டும்' அந்தப் புலம்பெயர் தமிழ் முதலாளியிடமிருந்து பல கோடிகள் பணம் பெற்றார்கள் என்று மற்றைய கட்சிகளின் தலைவர்கள் நம்புகின்றனர். இது கூட்டணித் தர்மத்திற்கே அவர்கள் செய்த துரோகம் என்று கருதப்படுவதால் இன்றைய கூட்டத்தில் இந்த விவகாரம் பெரும் பூகம்பமாகக் கிளம்பும் என்றும் தெரிகின்றது. இப்படி கூட்டணிக்குள் இருந்தபடியே மற்றொரு கட்சிக்கு விசுவாசமாகப் பயணிப்போம் என்று உடன்படிக்கையில் கையெழுத்திடுபவர்களுடன் எப்படித் தொடர்ந்து பயணிக்க முடியும் என்பதே அவர்களின் கேள்வி.

எப்படியிருந்தாலும் இந்தக் கூட்டணி தொடரவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஈபிஆர்எல்எவ் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சிகள் இருக்கின்றன. இன்றைய கூட்டத்தில் அதற்கான முயற்சிகளில் இந்த இரு தரப்பும் ஈடுபடக்கூடும். ஆனாலும் அதற்கான அந்தக் கட்சிகளின் தார்மீகத் தகுதி குறித்தும் கூட்டணிக்குள் பலத்த சந்தேகங்கள் இருக்கின்றன.

.................................................................

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் 2024இல் ஏற்பாடு செய்யப்பட்ட 'சிமாட் யூத் நைட்' இசை நிகழ்ச்சிகளுக்காக 33 கோடியே 33இலட்சத்து 93 ஆயிரத்து 249 ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வின் ஊடாக இந்த விடயம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கும்போது இத்தனை கோடிகளைச் செலவழித்து களியாட்ட நிகழ்வுகளை நடத்தும் தேவை என்ன? இளைஞர்களின் போராட்ட மனநிலையைத் திசை திருப்புவதற்காக இத்தகைய களியாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டனவா என்கிற வகையில் தற்போது சர்ச்சைகள் எழத் தொடங்கியுள்ளன.

மஹரகம தேசிய இளைஞர் நிலையத்தால் இந்த இசை நிகழ்ச்சிகள் காலி, அம்பாறை, குளியாப்பிட்டி, புத்தளம், தம்புள்ள, யாழ்ப்பாணம், மஹியங்கனை, ஹட்டன், ஹிங்குரங்கொட, பண்ராடவளை, வெலிசறை,கொழும்பு, கெத்தராம, ஆகிய இடங்களில் நடத்தப்பட்டுள்ளன.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக இருந்த ஹரின் பெர்னான்டோ இருந்த காலத்திலேயே இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. தேசிய இளைஞர் சேவை மன்றம் இந்த அமைச்சின் கீழேயே வருகின்றது. ஹரின் பெர்னான்டோ சஜித் தரப்பிலிருந்து ரணில் பக்கம் தாவி இந்த அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டவர்.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இவ்வளவு பெரிய தொகை செலவிடப்பட்டது குறித்த கணக்காய்வு அறிக்கை, அதன் பரிந்துரைகளுடன் தற்போதைய தேசிய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர பணிப்புரை விடுத்துள்ளார்.

அண்மையில் மதுபான விடுதி ஒன்றில் ஹரின் போதையில் அட்டகாசம் செய்த காணொலி சமூகஊடகங்களில் பரவி பரபரப்பைக் கிளப்பியிருந்த நிலையில் தற்போது இந்தச் சர்ச்சை உருவாகியுள்ளது.

சஜித் தரப்பிலிருந்து ரணில் பக்கம் ஹரினுடன் சேர்ந்து தாவிய மற்றொருவர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவார் என்று கூறி பணத்தை ஏமாற்றினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## ரோஹிங்யா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த 103 ஆதரவற்ற மக்களில் நாற்பதுக்கும் மேற்பட்ட சிறுவர்களும் உள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. பாதுகாப்பான நாட்டில் அரசியல் தஞ்சம் பெறுவதே அவர்களின் நம்பிக்கையாகும்

அவர்களை மியன்மாருக்கே நாடு கடத்துவது ஆளும்தரப்பின் திட்டம் என பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். அவர்களின் பெயர்ப் பட்டியல் அந்த நாட்டு ஆளும்தரப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுஅவர்களுக்குமட்டுமன்றிமியான்மரில் வாழும் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும். மேலும், அவர்களை மியான்மருக்கு அனுப்புவது, ஒரு குறிப்பிட்ட நாட்டில் ஆபத்தில் இருக்கும் மக்களை திரும்பப் பெறக்கூடாது என்ற சர்வதேச சட்டக் கோட்பாட்டையும் மீறுவதாகும். உங்கள் ஆட்சிக் காலத்தில் நாட்டிற்குள் நுழைந்த முதல் அகதிகள் குழுவை அவர்கள் வந்த நாட்டின் வாய்க்கு அனுப்புவதன் மூலம், நாடு உலகத்தின் பார்வையில் ஒரு வடுவை ஏற்படுத்தும்.

இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட இந்த மண்ணைக் குணப்படுத்துவேன் என்று நாடாளுமன்றத்தில் தனது கன்னி உரையில் உறுதியளித்த அரச தலைவரே, இனக்கலவரங்களால் குருதி வெள்ளத்தில் நனைந்த மண்ணின் மக்களை அந்தத் தலைவிதியிலிருந்து காப்பாற்றாமல், தெரிந்தே ஆபத்தில் ஆழ்த்துவது நல்லதல்ல.

பல தசாப்தங்களாகப் பாதாள அரசியலில் ஒளிந்து கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு கட்சியின் தலைவரான நீங்கள், அரசின் அடக்குமுறையின் அளவை கசப்பான அனுபவத்திலிருந்து அறிவீர்கள். எனவே, இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியாக்களை வேறு நாட்டிற்கு நாடு கடத்துவதை விடுத்து, எமது நாட்டில் அவர்களின் நலனில் அக்கறை செலுத்தி, பாதுகாக்கும் இலங்கையின் விருந்தோம்பலின் அற்புதத்தை உலகுக்கு எடுத்துக்காட்ட இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள்.

அவர்களுக்குரிய மனித உரிமைகள் மற்றும் தங்குமிடங்களை நான் கோருகிறேன் அந்த நடவடிக்கைக்கு ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட அமைப்புகள் மட்டுமின்றி எதிர்க்கட்சிகளின் ஆதரவையும் நீங்கள் பெறுவீர்கள் என்பது எங்கள் நம்பிக்கை - என்றுள்ளது.

## சமையல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் திருத்தம் செய்யப்பட்ட விலையே இன்னும் தொடர்கிறது.

இதற்கமைய 12.5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 3690 ரூபாயாகவும், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1482 ரூபாயாகவும், 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 694 ரூபாயாகவும் காணப்படுகிறது.

இதேவேளை இந்த மாதத்திற்கான லாஃப்ஸ் எரிவாயு விலைத் திருத்தம் தொடர்பான முடிவை நாளை திங்கட்கிழமை அறிவிப்பதாக லாஃப் எரிவாயு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தற்போதைய விலையை தொடர்ந்து அமுல்படுத்துவதற்கு அதிக சாத்தியம் காணப்படுவதாக எதிர்பார்பார்க்கப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எலிக் காய்ச்சல் நோய் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் என 202 நோயாளர்களின் தகவல்கள் எமக்கு கிடைக்கப்பெற்றது. இவற்றிலே 94 பேருக்கு இந்த எலிக்காய்ச்சல இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் 10 நோயாளர்கள் எலிக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இவர்களில் ஏழு பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும், மூன்று பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் இவ்வாறு சிகிச்சை பெற்றுவருகின்றனர். கடந்த 24 மணிநேரத்தில் மூன்று பேர் எலிக்கய்ச்சல் நோய் என்ற சந்தேகத்துடன் புதிதாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஜனவரி 2 யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரண்டு இறப்புகள் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக ஏற்பட்டுள்ளது. இதில் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்தவர். மற்றவர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் எலிக் காய்ச்சல் காரணமாக இதுவரை எட்டு இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள துன்னாலைக் கிராமத்தை சேர்ந்த 23 வயதுடைய ஆண் ஒருவர் ஜவரியில் உயிரிழந்துள்ளார். இவருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் இவர் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லவில்லை. மருந்தகங்களிலும், தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுள்ளார்.

பின்னர் நோய் முற்றிய நிலையில் ஐந்து அல்லது ஆறு நாட்களுக்குப் பின்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி இவ்வாறு உயிரிழந்தார்.

அத்துடன் நாங்கள் அவரது பகுதியில் வழங்கிய தடுப்பு மருந்துகளையும் இவர் துரதிஷ்டவசமாக பெற்றுக்கொள்ளவில்லை. விவசாயிகள், கடல் நீரில் மீன் பிடிக்க செல்பவர்கள் மற்றும் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்கள் தடுப்பு மருந்தை, தங்களது சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளுக்குச் சென்று பெற்றுக்கொள்வது அவசியம்.

எலிக்காய்ச்சலால் ஏற்பட்ட பெரும்பாலான இறப்புக்கள் தாமதமாக சிகிச்சைக்கு வந்த காரணத்தினாலேயே சம்பவித்துள்ளது. பின்னர் நாங்கள் ஏற்படுத்திய விழிப்புணர்வுக்கு அமைவாக மக்கள் காய்ச்சல் ஏற்பட்டபோது உடனடியாக சிகிச்சையை பெற்றுக் கொண்ட நிலையில் அவர்களது உயிரை காப்பாற்றகூடியவாறு இருந்தது. ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் தாமதிக்காமல் அருகில் உள்ள அரச வைத்தியசாலைக்கு செல்லுங்கள்.

இந்த எலி காய்ச்சல் கால்நடைகளில் இருந்து மனிதர்களுக்குப் பரவுகின்றதா என்பது தொடர்பான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்றன. அநேகமாக அதன் பெறுபேறுகள் அடுத்த வாரத்தில் வெளிவரும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

## சமூக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலந்தி கொட்டஹச்சி குறித்து சமூக வலைத்தளங்களில் அவதூறு பதிவிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் ரவீந்த கம்முனியை நீதிமன்றில் முற்படுத்தியபோதே பொலிஸார் இதனைத் தெரிவித்தனர்.

ரவீந்தவின் பதிவுகள் காரணமாகத் தான் மிகுந்த அவமானம், அச்சம் மற்றும் மன உளைச்சலுக்கு ஆளானார் எனவும் சமூகத்தில் அவமானம் ஏற்பட்டதாகவும் குடியிருப்பாளர்கள் கூட அதிருப்திக்கு ஆளாவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பதிவுகளால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதம மனநல மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுள்ளதாகவும், மேலதிக மனநல சிகிச்சை தேவைப்படுவதால், தேசிய வைத்தியசாலையின் மனநல மருத்துவ மனைக்குத் தான் அனுப்பி வைக்கப்பட்டார் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

பொலிஸாரின் வாதங்களைக் கேட்ட பின்னர் சந்தேகநபரை எச்சரிக்கை செய்த நீதிவான், அவரை 5 லட்சம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதித்தார்.

## நாடாளுமன்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுப் பணியாளர்களில் இருந்தே அதன் உயரதிகாரிகள் இதுவரையில் நியமிக்கப்பட்டு வந்தார்கள். இப்போது வெளியில் இருந்து ஆட்களை வேலைக்கு அமர்த்துவதால் நீண்டகாலமாக நாடாளுமன்றத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்படுவதாகப் பலரும் ஆளும்தரப்பிடம் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேநேரம் அரசநிர்வாகசேவையிலிருந்து திணைக்களங்களின் உயர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதைப் போன்று நாடாளுமன்ற உயர் பதவிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என்ற ஆளும்தரப்பு விரும்புகின்றது. அண்மையில், நாடாளுமன்ற உயர் அதிகாரிகளின் கலந்துரையாடலில் இவ்விடயம் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

இதேவேளை, பொருளாதார நெருகடி காரணமாக நாடாளுமன்ற ஊழியர்களுக்கான விடுமுறைக்காலக் கொடுப்பனவை நிறுத்துவதற்கும் ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது. இது தொடர்பாகவும் ஊழியர்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து வருகிறோம். இவ்வாறான நிலையில் எமது நிறுவனத்திற்கு சொந்தமான வாகனம் சுண்ணக் கற்களை திருகோணமலைக்கு கொண்டு செல்லும் வழியில் சாவகச்சேரியில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வீதியின் குறுக்காக தனது வாகனத்தை நிறுத்தி மறித்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்தும் வகையில் தனது வாகனத்தை எமது வாகனத்துக்கு முன்னால், பிரதான வீதியில் நிறுத்தி சாரதியை மிரட்டி வாகன திறப்பை வாங்கியமை சட்டத்துக்கு விரோதமான செயற்பாடு.

1992 ஆம் ஆண்டு 33 இலக்க சட்டத்தின் 28 (1)(2) பிரிவுகளின் பிரகாரம் எமது வாகனம் சுண்ணக் கற்களை எடுத்துச் சென்றது. முதலாவது பிரிவானது கனியவளங்களை அகழ்வதற்கான அனுமதி, எடுத்துச் செல்வதற்கான வழி அனுமதிப்பத்திரம் என்பவற்றை பற்றி கூறுகிறது. அதன் பிரகாரம் கல் , ஆலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

கல் உடைக்கும் ஆலைகள் தமது வியாபார நிலையத்தை பதிவு செய்துள்ளார்கள். மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதி பெற்றுள்ளார்கள் அதுமட்டுமல்லாது கனியவளத் திணைக்களத்தில் அனுமதி பெற்றுள்ளார்கள்.

நவீன தொழில்நுட்பத்தின் மூலம் கொழும்பிலிருந்து ஜி.பி.எஸ் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு சகல அனுமதிகளும் பெற்றவர்களிடமிருந்து நாம் கல்லை மட்டும் வாங்குகிறோம். நாம் கிடங்கு கிண்டுவதோ அல்லது கல்லை உடைப்பவர்களோ அல்ல.

முறைப்படி அனுமதிபெற்றவர்களிடமிருந்து பணம் கொடுத்து அவர்களின் கல்லை வாங்கி திருகோணமலைக்கு கொண்டு செல்கிறோம். அதில் நாமும் சிறிய இலாபம் அடைவதோடு கல்லுடைக்கும் தொழிலாளர்கள் மற்றும் கல் ஆலைகளை நம்பி தொழில் செய்பவர்களின் வாழ்வாதாரத்தையும் நாம் பாதுகாத்து வருகிறோம்.

இலங்கைச் சட்டத்துக்கு உட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் அன்றிலிருந்து இன்றுவரை இடம்பெற்று வரும் நிலையில் இதை அறியாத சிலரின் தூண்டுதலின் பேரில் எமது நிறுவனத்தையும் எமது வியாபாரத்தையும் அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் இளங்குமரன் எம்.பி செயல்பட்டிருக்கிறார்.

தொடர்ச்சி 7ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# ஊடகவியலாளரைத் தாக்கியோர் மீது கடும் சட்ட நடவடிக்கையை எடுங்கள்

## உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் வலியுறுத்து



(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை நைனாகாடு பிரதேசத்தில் உள்ளூர் ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கைஉழைக்கும்பத்திரிகையாளர்கள் சங்கம் பொலிஸ் மா அதிபருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதும்

இது தொடர்பாக இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் துமிந்த சம்பத் மற்றும் செயலாளர் ஆகியவர்கள் ஒப்பமட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் -

அம்பாறை, சம்மாந்துறை பிரதேசத்தில் அம்பாறை பிராந்திய ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் அச்சல உபேந்திரா மீது சிலர் தாக்குதல் நடத்தியதுடன், அவரது கமரா உபகரணங்களும் சேதப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

குறித்த பிரதேசத்தில் இடம்பெற்று வரும்மணல்அகழ்வுமோசடி தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் தொழில்சார் கடமையில் ஈடுபட்டிருந்த போதே அவர் இந்த துரதிஷ்டவசமான கதியை எதிர்கொண்டுள்ளார்.

இலங்கை நிபுணத்துவ ஊடகவியலாளர்கள் சங்கம் இச்சம்பவத்தை வெறுப்புடன் கண்டிப்பதோடு, ஊடகவியலாளர்களை குறிவைத்து தொடரும் இவ்வாறான செயற்பாடுகள் ஜனநாயக சமூகத்தில் மிகவும் இழிவான நிலையாகும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

ஊடகவியலாளர்கள்படுகொலைகள், ஊடகவியலாளர்கள் காணாமற்போதல், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், ஊடக நிறுவனங்கள் எரிப்பு போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக இதுவரை நீதி கிடைக்காத சமூகத்தில் இவ்வாறான துரதிஷ்டவசமான நிகழ்வுகள்தொடர்ந்தும்இடம்பெற்று வருவது மிகவும் வருந்தத்தக்கது.

எனவே, இச்சம்பவம் குறித்து பாரபட்சமற்ற விரைவான விசாரணை நடத்தி, சம்பவத்துடன் தொடர்புடைய தரப்பினர் மீது சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தி, சம்பவத்தை எதிர்கொண்ட அச்சல உபேந்திராவுக்கு நீதி கிடைக்கவும், தேவையான பின்னணியை தயார் செய்யவும் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்துள்ளனர்.

# இடமாற்றம் வழங்கிய பின்னும் செல்ல மறுக்கும் ஆசிரியர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பது?

## வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கேள்வி



இடமாற்றம் வழங்கியும் குறித்த பாடசாலைக்கு செல்லாத ஆசிரியர்களுக்கு என்ன நடவடிக்கை எடுப்பது என வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தெற்கு வலய ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

வவுனியா தெற்கு வலயத்தில் ஆசிரியர் இடம்மாற்றம் தொடர்பாக பேசப்பட்டது. செட்டிகுளத்திற்கும், நகரப் பாடசாலைகளுக்கும் இடையில் பெரியளவில் வித்தியாசம் இல்லை. இருக்கின்ற ஆசிரியர்களை பகிர்ந்து வழங்கியுள்ளோம்.

இடமாற்றம் என்பது இடமாற்ற சபை ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. தனிய அதிகாரியோ அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரோ அதனை மேற்கொள்ளவில்லை. தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் இடமாற்ற சபையில் இடமாற்றம் செய்யப்படும். மேன் முறையீட்டு சபையிலும் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் அதனை செயற்படுத்தாத ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை இல்லை.

அவர்கள் போகாது விட்டால் வலயக் கல்விப் பணிப்பாளரால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதற்கு என்ன தீர்வு என்று சொன்னால் செய்ய முடியும். அந்த தீர்வை வரையறுத்து தந்தால் நாம் நடவடிக்கை எடுப்போம் எனத் தெரிவித்தார்.100

# செய்தியாளர் மீது தாக்குதலில் கைதான நால்வருக்கு மறியல்

(பர்வீஸ்)

நியூஸ்ஃபெஸ்ட் செய்தியாளர் தாக்கப்பட்டமை தொடர்பாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை ஆஜர் படுத்தியதன்பின்னர் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம், இறக்காமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நைனாகாடு பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்பான செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளரை தாக்கி, ஊடக உபகரணங்கள் பறிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை ஆறு சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்து இறக்காமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளைஇறக்காமம்பொலிஸார் மேற்கொண்ட போது, செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர் அச்சல உபேந்திர மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் மேலும் மூன்று சந்தேக நபர்களை வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.



இதற்கு அமைய, சம்பவம் தொடர்பில்ஒன்பதுபேர்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட ஆறுபெயரில்ஒருவரும்வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட மூவரும் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஏனைய சந்தேக நபர்கள் ஐவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு அமைய சம்பவம் தொடர்பில் தாக்குதல் மேற்கொண்ட நால்வரையும் வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போது சந்தேக நபர்கள் ஜனவரி 7 ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட உள்ளனர்.

# சம்மாந்துறை பொலிஸார் விடுத்திருக்கும் அறிவித்தல்

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் அதிக ஒளி மற்றும் ஒலி எழுப்பும் மோட்டார்சைக்கிள்மற்றும்ஓட்டோ பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த மோட்டார் சைக்கிள்மற்றும்ஓட்டோ பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பிக்கும் போது அல்லது முடிவடையும் போது பெண் பிள்ளைகளுக்கு தொந்தரவு செய்யும் குறித்த நபர்கள் பற்றிய தகவல்கள் தெரிந்தால் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கவுமாறும் குறித்த விடயம் தொடர்பில் தகவல் தருபவரின் இரகசியம் பாதுகாக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் சம்மாந்துறை பொலிஸ் நிலையம் 0672 260 222 எண்ணை தொடர்பு கொண்டு குறித்த நபர்கள் பற்றிய தகவலை அறிவிக்குமாறும் கேட்டுள்ளனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சுண்ணாம்புக் கல் விவகாரத்தில் இறுக்கமான நடவடிக்கை தேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து சுண்ணாம்புக் கற்கள் அகழப்படும் பிரச்சினை மீண்டும் சூடுபிடித்துள்ளது. அவ்வப்போது இந்தப் பிரச்சினை சூடுபிடிப்பதும் பின்னர் அடங்கிவிடுவதும் இந்த வியாபாரம் தொடர்ந்து நடப்பதும் இதற்கு முன்னரும் அடிக்கடி நடந்து வந்ததுதான். இந்தத் தடவை இது இன்னும் சற்று முன்னேறி காவல் நிலையம் வரைக்கும் சென்றுள்ளது. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக இந்த வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர் ஒருவர் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யும் அளவிற்கு பிரச்சினை நீண்டுள்ளது. அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்களுக்கு இடையிலான பிரச்சினை என்பதால் விரைவில் இது சமரசம் செய்யப்பட்டுவிடும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே என்றாலும் யாழ்ப்பாண மக்கள் விழிப்புணர்வு அடைய வேண்டிய எச்சரிக்கையைத் தருகிறது இந்தச் சம்பவம்.

யாழ்ப்பாணம் நிலத்தடி சுண்ணாம்புக் கற்பாறைகள் நிறைந்த பூமி. இங்கு நிலத்தடி தண்ணீர் தேங்கி நிற்பதற்கு இந்த சுண்ணாம்புக் கற்கள் மிக முக்கிய காரணம். வேறு இயற்கையான நன்னீர் வளங்கள் இல்லாத யாழ்ப்பாணம் இப்போது வரைக்கும் இந்த நிலதடித் தண்ணீரையே குடிதண்ணீர் மற்றும் பாவனைக்கு நம்பியிருக்கின்றது. இந்த நிலையில் சுண்ணாம்புக் கற்களை அகற்றுவது எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகும் சுற்றுச்சூழல் பாதிப்புக் குறித்து எச்சரிக்கை அடையவேண்டியது குடாநாட்டு மக்களின் தேவையாக இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மேற்படை மண்ணுக்கு நெருக்கமாக சுண்ணாம்புக் கற்கள் வளர்ந்துள்ளன. இதனால் இந்தப் பகுதிகளில் விவசாயத் தேவைக்காக இரண்டு அடிகள் வரையும் சுண்ணாம்புக் கற்களை அகழ்ந்து எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. மேற்படை மண் பகுதியில் நிலத்தடி தண்ணீர் தேங்கி நிற்கப்போவதில்லை என்கிற அடிப்படையில் இவ்வாறு இரண்டு அடி தூரத்திற்கு சுண்ணாம்புக் கற்கள் அகழப்படுவதால் பாதிப்பில்லை என்று கருதப்படலாம். ஆனால், சுண்ணாம்புக் கற்களை அகழ்வதற்கான அனுமதியை கனியவளத் திணைக்களத்தினரிடமிருந்து பெறுவோர் பல இடங்களிலும் அனுமதிக்கப்பட்ட அளவிலும் பார்க்க ஆழமாக, மிக ஆழமாக கற்களை அகழ்ந்து எடுத்துள்ளனர் என்பது கண்கூடு. இப்படி அத்துமீறி கற்கள் அகழப்படுவது கண்காணிக்கப்படுவதோ அவ்வாறு அத்து மீறியவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்படுவதே நடப்பதில்லை என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. இதனால் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலேயே இந்த சுண்ணாம்புக் கல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு கற்கள் ஆழத்திற்கு அகழப்படும்போது கடல் நீரை ஊரிற்குள் வரவேற்கிறோம் என்றே அர்த்தம். உரிய அனுமதியுடன்தான் அகழ்கின்றோம், கொழும்பில் இருந்தபடி அகழ்வைக் கண்காணிக்கிறார்கள் என்பதெல்லாம் வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகளே. இங்கு அகழ்பவர்களும் கண்காணிப்பவர்களும் தமது பணிகளைச் சட்டத்திற்கு உட்பட்டு சரியாகச் செய்யவில்லை என்பதற்கு சுண்ணக்கல் அகழப்பட்டதால் பல இடங்களிலும் ஏற்பட்டுள்ள ஆழக் குழிகளே சான்று.

அரச அனுமதி என்பது புவியில் அடிப்படை ஆய்வுடன் கொடுக்கப்படுகிறதா என்பதை நாம் கேள்விக்குட்படுத்தியாகவேண்டியிருக்கிறது. யாழ்ப்பாணம் கடலால் சூழப்பட்ட பகுதி. அப்படியிருப்பினும் இங்கு மக்கள் பயன்பாட்டிற்கு நன்னீர் கிடைப்பதற்குரிய ஒரே காரணம் இந்த சுண்ணாம்புக் கற்கள்தான். யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர்ப்படுக்கை மிக விசேடமானதும், தனித்துவமானதுமானதுமான ஒன்றுமாகும். இது ஆழமற்ற துவாரங்கள் கொண்ட நீர்ப்படுக்கை என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

முழு யாழ் குடாநாட்டின் நிலத்தடி அமைப்பும் மயோசீன் (னிஷ்லி– உளஜள யிஷ்துளவிமிலிஜள) எனப்படும் சுண்ணக்கல் பாறைகளால் ஆக்கப்பட்டுள்ளது. இந்த பாறைகள் இடையிடையே துவாரங்கள் கொண்டவை. இந்த சுண்ணாம்புக் கற்களின் சராசரி ஆழம் 100 150 மீற்றர்கள். இவற்றில் இருக்கும் துளைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவை. இவற்றின் வழியாகத்தான் கிணறுகளுக்கு நிலதடி நீரூற்று வருகின்றது.

இந்தப் பாறைகளையெ0ல்லாம் அனுமதி பெற்று உடைத்தால்கூட எதிர்காலத்தில் கடும் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. அதிலும் விதிமுறைகளை மதிக்காத, சரியாகப் பின்பற்றாத தொழில்முனைவோரைக் கொண்டிருக்கக்கூடிய நிலத்தில் இத்தகைய அகழ்வுகள் ஒட்டுமொத்த மக்களையும் ஆபத்துக்குள்ளாக்குவனவாகவே இருக்கின்றது.

நடந்ததின் பின்னர் வருந்துவதைவிட, எச்சரிக்கையோடு முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதே நல்லது. அதனால் உடனடியாக சுண்ணாம்புக் கல் அகழ்வுகளை நிறுத்தி. அது குறித்த விரிவாக ஆய்வுகள் நடத்தப்படவேண்டும். இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும் ஆய்வு செய்யப்படவேண்டும். அதன் பின்னர் அகழப்படக்கூடிய பகுதிகளில் முறையான இறுக்கமான கண்காணிப்புடன் மட்டுமே அகழ்வுகள் அனுமதிக்கப்படவேண்டும்.

இதே சுண்ணாம்புக் கற்களை அகழ்ந்து சிமெந்து செய்வதற்கான காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் திறக்கக்கூடாது என்று வலியுறுத்திவரும் நிலையில் சுண்ணாம்புக் கற்களை அகழ்ந்து அவற்றை பிற இடங்களுக்கு ஏற்றுமதி செய்வது அபத்தத்திலும் அபத்தம். உரிய அதிகாரிகளும் தரப்பினரும் இது தொடர்பில் உடனடியாக இறுக்கமான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## தமிழ் அரசுக் கட்சி ஒன்றும் தவித்த முயலல்ல.



**ந.சதாசிவ ஐயர்**

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் தமிழ் அரசுக் கட்சி பின்னடைவைச் சந்தித்தது என்பதற்காக அதன் நாடாளுமன்ற உறுப்பினர் ஓரிருவர் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருக்கின்றார்கள் என்பதற்காக அதனைப் பயன்படுத்தி இவ்வளவு காலமும் வைத்தால் குடுமி அடித்தால் மொட்டை என இருந்தவர்கள் அதன் தலையில் மிளகாய் அரைக்கப் பார்ப்பதும், விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என கொண்ட கொள்கையை விட்டு காஞ்சமாடு கம்பில் விழுந்ததுபோல் தலைமைத்துவத்தை பிடிக்கலாம் என கனவு காண்பதும் நினைக்க நினைக்க சிரிப்புத் தரும் காரியங்களாகத்தான் இருக்கின்றன.

தமிழ் அரசுக் கட்சி தனி ஒருவரின் கட்சியல்ல. ஒரு காலத்தில் தமிழ் அரசின் தானைத் தலைவனாக இருந்த அண்ணன் மாவையின் வயோதிபத்தில் எல்லோருக்கும் ஏற்படுகின்ற இயலாமை, ஞாபக மறதி, மற்றோர் சொற்கேட்டல், ஆசை என்பவற்றால் ஏற்பட்ட விளைவே தமிழ் அரசின் பின்னடைவு. அதற்கு அவரைக் குறை சொல்ல எண்போன்றோர் முன்வரார். ஆனாலும் தற்போது நிலமை சற்று சீரடைந்துள்ளது. தற்காலிகமானாலும் ஆளுமையாக செயற்பட ஆரம்பித்துள்ளமை போன்று தெரிகிறது. பொதுக்குழு அந்தக்குழு இந்தக்குழு என்று எந்தக் குழுவை எடுத்தாலும் அவர்களை தலைமை சரியாக வழி நடத்தினாலன்றி காரியம் சீராக அமையாது. இனி காலகதியில் அது சீராகலாம் என எதிர்பார்ப்போம்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனது கருத்துச் சுதந்திரத்தைப் பாவித்தாலும் கட்சியின் முடிவில் அக்கறையாக உள்ளமை அவரது செவ்விகள் செயல்களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது. அது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இன்றைய நிலையில் இலங்கையில் எட்டுப் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மூன்றாவது பெரும் கட்சியாக இருப்பது தமிழ் அரசுக் கட்சியே. உள்ளக முரண்பாடுகளுக்கப்பால் தமிழ் அரசு தனித்து நின்று கோலோச்சும் என்பதில் ஐயமில்லை. தனித்து தனித்தனியாக நிற்போர் தமிழ் அரசுக்குப் பின்னால் நின்று தமது ஆதரவை ஒற்றுமையை வெளிப்படுத்துவதே சிறந்த வழியன்றி தாம்தாம் தலையென்று அதன் முதுகில் சவாரி செய்ய முயற்சிக்கக்கூடாது. அதற்குத் தமிழ் அரசு இடங்கொடுத்தலுமாகாது.

தமிழ் அரசில் அந்த அளவுக்கு புத்திஜீவிகள் அரசியலறிஞர்கள் இல்லாமல் போய்விடவுமில்லை; நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க முடியாதென்றுமில்லை. அரசமைப்பில் ஆளுமை செலுத்த முடியாதென்றுமில்லை. அத்தனை வளங்களும் அதனிடமுண்டு.

கட்சிகள் சேர்ந்து அறிக்கை தயாரித்ததும் அதில் சரிபிழை பார்க்க ஒப்பமிட இழுத்தடித்ததும் நலன்விரும்பிகள், கட்டுரையாளர்கள், பத்தி எழுத்தாளர்கள், கட்சிகள் என ஆண்டிகள் கூடி மடம் கட்டி மாய்ந்ததுவும் எல்லாம் எம் கண் முன்னே நடைபெற்ற நாடகங்களே.

ஆதலால் புதிய அரசும் தற்போதுதான் மெல்ல மெல்ல கற்க ஆரம்பித்துள்ளது. தேர்தலுக்குமுன் நீட்டி முழங்கியதுபோல் எதனையும் உடனடியாக வெட்டி வீழ்த்திவிட முடியாது என உணர்ந்தோ என்னவோ பழையமுறையில் மெல்ல மெல்ல காய் நகர்த்துகிறது. அவர்கள் நின்று நிதானிக்கவே கால அவகாசம் தேவையாகஉள்ளது. அதன் போக்குளை ஆராய்ந்து அதற்கமைய காலக்கிரமத்தில் சேர்ந்தும் சார்ந்தும் விவாதித்தும் போராடியும் செய்யவேண்டியதை செய்யவேண்டுமேயன்றிகுட்டையைக் குழப்புதல் நல்லதல்ல.

இப்போது தேவையற்றநாடகங்களில் அவசர அவசரமாக ஈடுபட்டு தமிழ் அரசு மீது அவர்களுக்கிருக்கும் கொஞ்ச நஞ்ச மதிப்பு மரியாதையையும் இழத்தல் நன்றன்று. சேரிடம் தெரிந்து சேர் என்பதற்கிணங்க இப்போது அவசரப்படாமல் "அண்ணே! மிக்க நன்றி! அவசரம் வேண்டாம். ஆறுதலாப் பேசுவோம். தேவைப்பட்டால் நாங்களே அழைப்போம்" என அவருக்கு ஆறதலா நாலு வார்த்தை சொல்லி அனுப்பிவையுங்கள். நல்லதே நடக்கும்!

# ரஷ்ய கூட்டமைப்பின் தூதுவர் கிழக்கு ஆளுநரோடு சந்திப்பு

(அபு அலா, முபீன்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர மற்றும் இலங்கைக்கான ரஷ்ய கூட்டமைப்பின் தூதுவர் லெவன் எஸ். டிகான்ஜன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை திருகோணமலை ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது,இலங்கைக்குமனிதாபிமான உதவியின் கீழ் ரஷ்ய கூட்டமைப்பிடம் இருந்து பெறப்பட்ட உரத்திற்கு தாம் மிகவும் நன்றிக் கடன்படுவதாக கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில்கிழக்குமாகாணத்துடனும்



இலங்கையுடனும் மிக நெருக்கமாக செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக ரஷ்யத் தூதுவர் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.



# ஐஸ் போதைப்பொருள்களுடன் கைதான இருவரிடம் விசாரணை

## கல்முனையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான், பர்வீஸ்)

நீண்டகாலமாக பாடசாலை மாணவர்களிற்கு போதைப் பொருள்களை விநியோகித்து வந்த இரு சந்தேக நபர்களிடம் இருந்துஐஸ்போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு கல்முனை விசேட அதிரடிப் படையினர் ஐஸ் போதைப்பொருளுடன் இருவரை கைது செய்துள்ளனர்.

கல்முனைவிசேடஅதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது 20வயது மற்றும் 19 வயது மருதமுனை பகுதியை சேர்ந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் வசமிருந்து மொத்தமாக 2460 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டிருந்தன.

மேலும் இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கைதான சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக கல்முனை தலைமையகபொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிகவிசாரணைகளைகல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.





காலைக்கதிர்
Kalaikkathir

# தரமான பால் உற்பத்தி மையங்கள் வடக்கில் கூட்டுறவு துறையூடாக உருவாகவேண்டும்

## கூட்டுறவு அபிவிருத்தி வங்கி தலைவர் அகிலன் கதிர்காமர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பால் வட மாகாணத்திற்குள் முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்றும் தென்பகுதியில் உள்ள தனியார் துறையுடன்போட்டி போடக்கூடிய பல சிறந்த தரமான பால் உற்பத்தி மையங்கள் வட மாகாணத்தில் கூட்டுறவு துறையினூடாக உருவாக்கப்பட வேண்டும் என வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை மற்றும்வடக்குகூட்டுறவுஅபிவிருத்தி வங்கியும் இணைந்து தந்தை செல்வா ஞாபகார்த்த மண்டபத்தில் கால்நடை வளர்ப்பாளர்கள், விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களுடன் 'உற்பத்தி கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி திறனை அதிகரித்து கிராமிய மற்றும் பிராந்திய பொருளாதாரத்தை மேம்படுத்துதல்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

அதில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவர் க.மகாதேவன் மற்றும் யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க சமாச தலைவர் ஸ்டீபன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கிராமிய பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை விளக்கி அகிலன் கதிர்காமர் உரையாற்றுகையில் -

பன்மைத்துவ வருமானம் பற்றியும் குறிப்பிட்டு இருந்தார். 1977 ஆம் ஆண்டு இலங்கையில் திறந்த பொருளாதார கொள்கையானது அமுல்படுத்தப்பட்ட போது உள்ளூர் உற்பத்திகள் குறைவடைந்து இறக்குமதிகள் அதிகரித்தமையால் கிராமிய பொருளாதாரம் படிப் படியாக வீழ்ச்சி அடைந்தது.

கிராமிய பொருளாதாரமானது தனியே கால்நடை வளர்ப்பு துறை, விவசாயம் துறை, பனை தென்னை வள அபிவிருத்தி என பிரித்து பார்க்க முடியாது என்றும் எல்லா துறையையும் சேர்த்துதான் கிராமிய அபிவிருத்தி ஏற்படுத்தமுடியும்.

பன்மைத்துவ வருமானமானது பண அடிப்படையாகவும் பொருள் அடிப்படையாகவும்வரும்வருமானங் கள் ஆகும். கிராமபுறங்களின் நிதி நிலைமையை மேம்படுத்துதல் மற்றும் வாழ்வாரத்தை பன்முகப்படுத்தலுக்கு பன்மைத்துவ வருமானம் இன்றியமையாதது.

வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களின் வாழ்க்கை தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவான பாலானாது வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

ஆனால் தரமான பால் உற்பத்தி



திறன் மற்றும் பெறுமதிசேர் உற்பத்தி மையங்கள் இல்லாமையால் பெருமளவுபாலானது தென்பகுதியில் உள்ள தனியார் நிறுவனங்களினால் கொள்வனவு செய்து பெறுமதி சேர் உற்பத்தி பொருள்களாக அதிக விலையில் மீளவும் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது

வடபகுதியில் தனியார் நிறுவனங்களால் 160 தொடக்கம் 170 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் பாலானது பதப்படுத்தப்பட்ட பெட்டி பாலாக 580 ரூபாவுக்கு நவீன அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

இச் செயற்பாட்டு பொறிமுறையில் யாருடைய உழைப்பு யாருடைய இழப்பு யாருக்கு இலாபம் என மக்கள் சிந்திக்க வேண்டும். அதேவேளை பால் உற்பத்தியின் தன்னிறைவான இறைமையை பற்றிய விளக்கிய அகிலன் கதிர்காமர் பால்சார் உற்பத்தியில் தனியார்ஆதிக்கம் பற்றியும் விளக்கியிருந்தார்.

மேலும், உணவுஇறைமையானது உணவு பாதுகாப்பில் இருந்து வித்தியாசப்பட்டது எனவும் உணவு இறைமை என்பது அந்தந்த பிரதேசத்தில் அந்தந்த மக்களுக்கு பொருத்துமான மற்றும் தேவையான உணவை அந்தப் பிரதேசத்தில் உற்பத்தி செய்துவிற்பனை செய்தல், உணவு இறைமை உணவு பாதுகாப்பை உறுதி செய்யும் பால்சார் உற்பத்தியில் தனியாரது ஆதிக்கமானது கிராமிய மட்டத்தில் பால் உற்பத்தியின் வளர்ச்சியிலும் தன்னிறைவான பொருளாதாரத்திலும்பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. எமது நாட்டின் பால்இறைமையானதுநியூசிலாந்தில் இருக்கின்றதனியார்கம்பெனியிடம் இருக்கின்றது.

எமது உள்ளூர் பால்பண்ணை யாளர்கள், கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமை அளித்து பால் பெறுமதி சேர் உணவு உற்பத்திய உற்பத்தி செய்து பாதுகாப்பான முறையில் பதப்படுத்திநுகர்வதற்கான ஆற்றலை வடமாகாணத்தில் உருவாக்குவதன் மூலம் வடமாகணத்தின் பால் இறைமை பூர்த்தி செய்ய முடியும்

தேசிய மட்டத்தில் சாதகமான பார்வையானது மாகாண மட்டத்திலும் கிராம மட்டத்திலும் கூட்டுறவுதுறைக்கான வாய்ப்பபை தற்போது ஏற்படுத்தி உள்ளது.

ஆட்சி மாற்றமானது பல முயற்சிகளுக்கும்பலவாய்ப்புகளும் வழிவகுக்கின்றது. சிறந்த ஒரு வருட திட்டமிடலானது பத்து வருட கால அபிவிருத்திக் வித்திடும்.

பால் உற்பத்தியில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் நமது வடமாகணத்தின் பால் இறைமையை கைப்பற்ற முடியும்.

வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பால் வட மாகாணத்திற்குள் முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்றும் தென்பகுதியில் உள்ள தனியார் துறையுடன்போட்டி போடக்கூடிய பல சிறந்த தரமான பால் உற்பத்தி மையங்கள் வட மாகாணத்தில் கூட்டுறவு துறையினூடாக உருவாக்கப்பட வேண்டும்.

காலநிலைகளுக்கு ஏற்ப பால் உற்பத்தியானது மாறுபடும். வருடம் முழுவதும் பால் தன்னிறைவை பூர்த்திசெய்கின்ற வினைத்திறனான தரமான பலவிதமான பெறுமதி அதிகரிப்புத்து திட்டங்களை கூட்டுறவு துறையினூடாக முன்னெடுக்க வேண்டும்.

பால் உற்பத்தியில் நாலு தொடக்கம்ஆறுமாடுகள்வைத்திருக் கும் பண்ணியாளர்களை சிறந்தவினைத்திறனானபண்ணையா ளர்கள். சிறு பண்ணையார்களுக்கு தேவையானஉள்ளீடுகளைஏற்படுத்தி கொடுப்பதன் மூலம் வினைத் திறனான பண்ணையாளர்கள் ஆக்க முடியும்.

சிறந்த தரமான பால் உற்பத்தி மையங்களை உருவாக்குவதற்கான விஷேட நிபுணத்துவம் பெற்ற பயிற்சியாளர்களை வரவழைத்து வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியானது பயிற்சி நெறிகளை வழங்கிவருகின்றது.இச்செற்பாட்டை மேலும் முன்னெடுத்துச் செல்லும்.

பால் பண்ணையாளர்களுக்கு உற்பத்தி செலவுகளை கணித்து நியாயமான லாபத்தில் பாலுக்கான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். எமது எதிர்கால சந்ததிகளின் ஆரோக்கியத்தை பேணுவதற்காக நுகர்வோருக்கு கணிசமான விலைக்கு பாலானது விற்கப்பட வேண்டும்.

வடமாகணத்தில் தற்போது பால் யுத்தம் நடைபெறுகின்றது. தென் பகுதியிலிந்நது யுத்தமானது வவுனியா மன்னர் கிளிநொச்சி யாழ்ப்பாணம் என முன்நகர்கின்றது.

வடமாகணத்தில்பால்புரட்சியை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு கால்நடை வளர்ப்பு கூட்டுறவு சங்கங்களும் ஒரு கூட்டு இயக்கமாக இணைந்து பால் யுத்தத்துக்கு தயாராக வேண்டும்.

தற்போதைய வடமாகண ஆளுநர் நா.வேதநாயகன் கூட்டுறவின் நண்பர். இக் கலந்துரையாடலின் அடுத்த கட்ட முன் நகர்வாக கால்நடை பிரதிநிதிகளையும் கால்நடை வளர்ப்புதுறையில் தொடர்புடைய திணைக்களங்களையும் ஒன்றி ணைந்துஆளுநர்உடன்இன்னும்ஒரு கலந்துரையாடலினைஒழுங்கமைக்க உள்ளோம்.

யாழ் மாவட்ட கூட்டுறவு சபை தலைவர் வடமாகணத்தில் தரமான பால் உற்பத்தி மையங்கள் வடக்கு கூட்டமைப்பு வங்கியின் தலைவர் அகிலன் கதிர்காமர் தலைமையிலும்அனுசரணையுடனும் உருவாக்கப்பட வேண்டும்.

யாழ் மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க சமாச் தலைவர் ஸ்டீபன் கால்நடைகளை வளர்ப்பதற்கு பண்ணையாளர்கள் பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கால்நடை தீவனப் பிரச்சினைகளுக்காக பதப்படுத் துப்பட்ட பசுந்தீவனங்களை உற்பத்தி நடவடிக்கைகள் வங்கியானது முன்னெடுக்க வேண்டும். - என்றார்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு இரண்டின் பிரகாரம் அரை கனியங்களை எடுத்து செல்வதற்கான அனுமதி தேவையில்லை. இதை அறியாத இளங்குமரன் எம்.பி எமது வாகனத்தை மறித்து கற்களுக்கு மேல் போடப்பட்டிருந்த பாதுகாப்பு உறையினைக் கிழித்து சட்டத்தை தன் கையில் எடுத்துள்ளார்.

ஏற்கனவே வவுனியா பொலிஸார் எமது வாகனத்தை மறித்து நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில், நீதிமன்றமானது சட்டத்துக்கு உட்பட்டே இந்த வர்த்தக நடவடிக்கை இடம்பெறுவதாகத் தெரிவித்து எமது வாகனத்தை விடுவித்தது.

அது மட்டுமல்லாது கெப்பெற்றிக்கொல்லாவை நீதிமன்றமும் சட்டத்துக்கு உட்பட்டே எமது வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தீர்ப்பு வழங்கியது.

வேறு மாகாணங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு எவ்வாறு கருங்கல்லு சல்லி மற்றும் தூள் எடுத்து வரப்படுகிறதோ அதே நடைமுறை சுண்ணக்கல்லுக்கும் இருக்கிறது. ஆளும்தரப்பு உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கூறுகின்ற நிலையில், விவசாயம் மேற்கொள்வதற்காக இரண்டு அடி ஆழம்வரை கல்லு தோண்டப்பட முடியும். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தென்மராட்சியில் உள்ள பழைய கிடங்கு ஒன்றினைக் காட்டி, நாம் புன்னாலைக் கட்டுவேன் பகுதியில் இருந்து எடுத்துச் சென்ற சுண்ணக் கல்லுக்கு விளக்கம் கொடுக்கிறார்.

யாரோ 4 பேர் வழங்கிய தகவலை பொதுமக்கள் வழங்கிய தகவலாகத் தெரிவித்து ஊடகங்களில் தவறான செய்தியை வழங்கியுள்ளார். எமது நிறுவனத்தை நம்பி 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதேபோல் கல் உடைக்கும் ஆலைகளை நம்பி பரம்பரை பரம்பரையாக கல்லுடைக்கும் தொழிலை மேற்கொள்ளும் 300க்கும் மேற்பட்டவர்கள் உள்ளார்கள். இவர்களின் வாழ்வாதாரத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதில் கூறுவாரா?

அவரின் செயற்பாடு தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் வழங்கிய ஊடக செய்திகள் தொடர்பில் காங்கேசன்துறையில் அமைந்துள்ள கணினி குற்றப்பிரிவுக்கும் முறைப்பாடு வழங்க உள்ளேன்.

சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றுவரும் நிலையில் அதனைத் தடுத்து தென் இலங்கையைச் சேர்ந்தவர்களை அழைத்துவந்து அவர்களுக்குத் தொழில் கொடுக்கும் சதி நடவடிக்கைகள் இடம்பெறுகிறதா என்ற சந்தேகம் எழுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் கடற்தொழில் அமைச்சரைச் சந்திப்பதற்குச் சென்றேன். அவர் அங்கு இல்லை எனது ஆதாரங்களை அவரது அலுவலகத்துக்கு சமர்ப்பித்தேன். அதனை ஆராய்ந்த அவரது அலுவலக உத்தியோகத்தர் அமைச்சரிடம் குறித்த விடயம் தொடர்பில் கூறினார். அதன் பின்னர் அமைச்சர் என்னிடம் பேசினார்.

நீங்கள் சட்டத்துக்கு உட்பட்டு செய்வதை செய்யுங்கள் எனக் கூறினார். இது எனக்கு ஆறுதல் அளித்தது. ஆகவே மாற்றத்தை விரும்பிய மக்களுக்கு ஏமாற்றத்தை வழங்குவது ஆளும்தரப்பின் நோக்கம் அல்ல. எனவே தொழில் வழங்குநர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்காமல் செயற்படுமாறு நாடாளுமன்ற உறுப்பினரைக் கேட்கிறேன் - என்றார்.

## 11 கிலோ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்ட தங்கம் 28 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையது என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 40 முதல் 45 வயதிற்கு இடைப்பட்ட கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என கடற்படையினர் தெரிவித்தனர்.

கற்பிட்டி-பத்தலண்குண்டுவ கடற்பகுதியில் சந்தேகத்திற்கு இடமான டிங்கி இயந்திர படகு ஒன்றினை கடற்படையினர் சோதனை செய்தபோது இந்தத் தங்கம் சிக்கியது. அந்த இயந்திர படகில் பயணித்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், குறித்த தங்கத்தைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இயந்திர படகு ஒன்றையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மற்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் என்பன மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளன என்று கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

## மலையகத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலமும் எமது பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை.

எமது ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெருபான்மையை பெற்றுள்ளது. இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களுக்கும் வளமான எதிர்காலத்தை பெற்றுக் கொடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களை அண்மையில் தொண்டமானுடைய ஆதரவாளர்கள் தாக்கிய சம்பவங்கள் பதிவாகியிருந்தன. ஆகையால் தொண்டமான், திகாம்பரம், கணபதி கனகராஜ் ஆகியோருக்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். உங்களின் காலம் 2023ஆம் ஆண்டோடு முடிவடைந்து விட்டது. இது எமது தலைவர் அநுரகுமார திசநாயக்கவினுடைய ஆளும்தரப்பு. எனவே நிதானமாகச் செயற்படுங்கள்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இவ்வளவு காலமும் மலையக பெருந்தோட்ட மக்களை ஏமாற்றி வந்தது. நாங்கள் இந்த மக்களுக்கு மாற்றத்தை கொண்டுவர 1965ஆம் ஆண்டில் இருந்து பெரும்பாடுபட்டோம். முன்னாள் அமைச்சர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். முன்னைய காலப்பகுதியைப்போல் தற்போது அட்டகாசம் பண்ணுவதை நிறுத்திக்கொள்ளுங்கள்.

இந்திய அரசு வழங்கிய வீடமைப்பு திட்டத்தில்கூட முன்னாள் மலையக தலைவர்கள் ஊழல் செய்துள்ளார்கள். அனைத்து ஊழல்களும் வெகுவிரைவில் வெளிவரும் எனக் குறிப்பிட்டார்.

## மீனவருடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படும் வகையில் செயற்படுவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்பதையும் நாம் இங்கே உறுதியாகக் கூறுகின்றோம். அந்த விடயங்களையும் நாம் கவனத்தில் கொள்ளவுள்ளோம் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு ஆளுநரைச் சந்தித்தார் இந்தியத் துணைத் தூதுவர்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இந்தியத் துணைத்தூதுவர் சிறிசாய் முரளிக்கும் இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பு நேற்று (சனிக்கிழமை) காலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.



இந்தச் சந்திப்பில் இந்திய துணை தூதரக முதன்மை நிர்வாக அதிகாரி ராம் மகேஷ் பங்கேற்றிருந்தார்.

இதன்போது ஆளுநர் மற்றும் துணைத்தூதுவர் இருவரும் பரஸ்பரம் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

இந்திய அரசாங்கத்தால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களுக்கு வடக்கு மக்கள் சார்பில் ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

புதிய ஆண்டில் இந்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வாறான உதவிகள் தேவை என்பது தொடர்பில் துணைத்தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்துகொண்டார்.

# சீனாவில் பரவும் எச்.எம்.பி.வி. எனப்படும் மனித மெட்டாப்நியூமோ ஒரு தொற்றல்ல

## பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவிப்பு



சீனாவில் பரவிவரும் எச்எம்பிவி. எனப்படும் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் ஒரு தொற்று அல்ல. அதேவேளை புதிய வைரஸும் அல்ல. 2001ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ் குளிர்காலத்தில் சுவாச நோய்களை ஏற்படுத்துவதாகுமென ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

குளிர்காலத்தில் இவ்வாறான சுவாச நோய்கள் ஏற்படுவது வழமையானதாகும். ஆனால் இது பொது சுகாதார அவசர நிலைமைக்கு காரணமாக அமையாது. அந்த வகையில் தற்போது சீனாவில் சுவாச நோய்த்தொற்றுகள் அதிகரித்து வருகின்றன.

இதன் அறிகுறிகளில் இருமல், சளி அல்லது மூக்கில் அடைப்பு, காய்ச்சல் மற்றும் தொண்டை புண் ஆகியவை அடங்கும். கடுமையான சந்தர்ப்பங்களில் மூச்சுத் திணறல் அல்லது மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் நிமோனியாவாக அதிகரிக்கும்.

2001 இல் கண்டுபிடிக்கப்பட்ட இது ஒரு புதிய வைரஸ் அல்ல. இது பொதுவாக சளி அல்லது காய்ச்சலைப் போன்ற அறிகுறிகளுடன் சுவாச நோய்த்தொற்றுகளை ஏற்படுத்துகிறது. சில சமூக ஊடக பதிவுகள் நெருக்கடியை ஏற்படுத்துகின்றன. ஆனால் சீனா அல்லது உலக சுகாதார ஸ்தாபனம் பொது சுகாதார அவசரகால நிலையை அறிவிக்கவில்லை.

# கிரிக்கெட் வீரர் ஜொன்டி ரோட்ஸ் குடும்பத்துடன் இலங்கையில்

தென்னாபிரிக்காவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜொன்டி ரோட்ஸ் தனது குடும்பத்தினருடன் இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளார்.

இவர் காலி, அஹுங்கம உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் உள்ள சுற்றுலாத்தலங்களைக் கண்டுகளிக்கவுள்ளார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜொன்டி ரோட்ஸ் தனது குடும்பத்தினருடன் ஓட்டோவில் இலங்கையில் உள்ள சுற்றுலாத்தலங்களுக்கு செல்லவுள்ளார். ஜொன்டி ரோட்ஸ் தனது குடும்பத்தினருடன் ஓட்டோவில் பயணம் செய்யும் புகைப்படம் தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது.

முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜொன்டி ரோட்ஸ் மற்றும் அவரது குடும்பத்தினரின் இலங்கைக்கான வருகை இலங்கையின் சுற்றுலாத்துறையை மேலும் ஊக்குவிக்கும் ஒன்றாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளம் பாதித்த மக்களுக்கு உலர் உணவு பொதிகள் உதவி

(ஹாரீஸ்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 50 குடும்பங்களுக்கு நளிர் பௌண்டேசன் அமைப்பின் வேண்டுகோளிற்கிணங்க அமெரிக்கா சக்காத் பௌண்டேசன் அமைப்பால் உலருணவு பொதிகள் நேற்று(சனிக்கிழமை) வழங்கிவைக்கப்பட்டது.

நளீர் பௌண்டேசன் அமைப்பின் ஸ்தாபக தலைவர் எம்.ஏ.நளீர் அவர்களின் அயராத முயற்சியின் பலனாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உதவிகளை செய்ய வேண்டும் என்று பல அமைப்புக்களின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருகின்றார்.








இதன் அடிப்படையில் அமெரிக்கா சக்காத் பௌண்டேசன் அமைப்பினிடம் வேண்டுகோள் விடுத்ததற்கமைய அதன் செயலாளர் பஸாஹுல் றஹ்மானால் சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவு பொதிகள் மத்திய முகாம் 3 ஆம் வட்டார பல்தேவைக் கட்டட வளாகத்தில் வைத்து பொதுமக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவை சேர்ந்த இளைஞர் கனடாவில் பரிதாப உயிரிழப்பு

கார் கதவு திறக்கப்படமையால் அதிக நேரம் மூச்சு திணறல் ஏற்பட்டு பரிதாபமாக தமிழ் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா, வீரபுரத்தைச் சேர்ந்த குறித்த இளைஞர் கனடாவில் வாழ்ந்து வருகின்றார். வெள்ளிக்கிழமை தேவை நிமிர்ந்தம் வெளியில் சென்ற நிலையில் இவ் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது .

சம்பவத்தில் வவுனியா, வீரபுரத்தைச் சேர்ந்த ஜேக்கப் நெவில் டிலக்சன் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

100

# வவுனியாவில் இன்று கூடுகின்றது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைக்குழுக் கூட்டம் வவுனியாவில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் முதல் தடவையாக கூடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைக்குழுவானது தேர்தல் முடிவுகள் தொடர்பில் ஆராயவுள்ளது.

அத்துடன் அடுத்த கட்டமாக எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பது குறித்தும் விரிவாகக் கலந்துரையாடவுள்ளதோடு உள்ளூராட்சி தேர்தலை முகங்கொடுப்பதற்கான வியூகங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தவுள்ளது.

கூட்டணிக்குள் இளந்தலைமுறையினரை உள்வாங்குதல் மற்றும் சிரேஷ்ட தலைவர்களின் எதிர்கால அரசியல் பயணம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் உரையாடப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

# சீனாவில் உள்ள மாணவர்கள் விவரம் கோருகிறது தூதரகம்

சீனாவில் உயர் கல்வி மற்றும் மேற்படிப்புக்காக தங்கியுள்ள மாணவர்கள் தங்கள் விவரங்களைப் பகிர்ந்துகொள்ளுமாறு சீனாவில் உள்ள இலங்கைத் தூதரகம் கோரியுள்ளது.

தற்போது, தூதரகத்தில் அரச உதவித்தொகை பெறும் மாணவர்களின் பதிவுகள் மட்டுமே உள்ள நிலையில் இயற்கை பேரழிவுகள் போன்ற அவசரநிலைகளின்போது உதவி வழங்குவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என்றும் தூதரகம் தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

# ஊர்காவற்றுறை படகு திருத்தும் நிலையத்துக்கு கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் களஆய்வு

யாழ். ஊர்காவற்றுறை பகுதிக்கு வெள்ளிக்கிழமை விஜயம் செய்த கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோர் ஊர்காவற்துறை இறங்கு துறையை பார்வையிட்டதுடன் ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள படகு திருத்தும் நிலையத்தையும் பார்வையிட்டனர்.

அந்தபடகுதிருத்தும்நிலையமானது கடந்த அரசாங்கத்தால் 2021ஆம் ஆண்டுதிறந்துவைக்கப்பட்ட நிலையில் செயலிழந்து காணப்படுகிறது.

அதில் இதுவரை ஒரு படகு மட்டுமே ஏற்றப்பட்டுகாணப்படுவதாகவும்,அந்த படகு திருத்தும் நிலையத்தை இயங்க



வைப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதாவும் அவர்கள் தெரிவித்தனர்.

## கிளிநொச்சியில் காணாமல்போனவரின் சடலம் முறிப்புக் குளத்தில் கண்டுபிடிப்பு

மனநலம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் காணாமல்போனதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், தேடப்பட்டு வந்த நபரின் சடலம் நேற்று (சனிக்கிழமை) முறிப்பு குளத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

முறிப்புக் குளத்தின் தடுப்பு அணையில் அந்த நபரின் சைக்கிள் மற்றும் செருப்பு ஆகியன கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து முறிப்பு குளத்தில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதே சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - கோணாவில் மத்தியை சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட நபர் காணாமல் போனதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வியாழக்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது கிளிநொச்சி முறிப்புக் குளத்தின் தடுப்பு அணையில்,காணாமல்போனநபரின்சைக்கிளும் அவரது செருப்பும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த நபரை முறிப்பு குளத்தில் தேடும் பணிகள் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் அவரது சடலம் மீட்கப்படவில்லை. இந்நிலையில் நேற்று அக்குளத்தில் மிதந்த நிலையில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டு, உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25ஆவது நினைவுப் பேருரை இன்று

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆம் ஆண்டுநினைவுப்பேருரையும் நினைவேந்தல் நிகழ்வும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3 மணிக்கு பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையரங்கில் நடைபெறும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் நினைவுப் பேருரையை 'மக்கள் மயப்படுத்தப்படவேண்டிய அரசியல்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் நிகழ்த்தவுள்ளார்.

அனைவரையும் மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# துமிந்தவுக்கு விசேட வசதிகள் சிறையில் வழங்கப்படவில்லை



## ஊடகப் பேச்சாளர் தகவல்

அண்மையில் உயர்நீதிமன்றத்தால் மரண தண்டணைஉறுதிசெய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள துமிந்த சில்வாவுக்கு சிறைச்சாலை அதிகாரிகளால்விசேடவசதிகள் பெற்றுக்கொடுக்கப்படுவதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்உண்மைக்கு புறம்பானவையென சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி.திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் பூஸா அதிஉயர் பாதுகாப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளுக்கு தடை செய்யப்பட்ட பொருள்களை வழங்கியமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய சிறைச்சாலையின் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

சிறைச்சாலையில்தடுத்துவைக்கப்பட்டுள்ள சில சிறைக்கைதிகளுக்கு விசேட வசதிகள் பெற்றுக்கொடுக்கபட்டுள்ளதாக சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு அண்மையில் குற்றச்சாட்டியிருந்தது.

இந்நிலையில் இது தொடர்பில் வினவிய போதே சிறைச்சாலைகள் ஊடக பேச்சாளர் காமினி பி.திசாநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# நீர்நிலைக்குள் வீழ்ந்து உயிரிழந்த குழந்தை

## மட்டக்களப்பில் பரிதாபம்

பெற்றோரின் கவனவீனம் காரணமாக நீர்நிலைக்குள் வீழ்ந்து ஒன்றரை வயது குழந்தை உயிரிழந்த சம்பவம் நேற்;று (சனிக்கிழமை) அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று இளைஞர் விவசாயத்திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்ட வாய்க்கால் நீரோடையில் விழுந்து இந்த ஆண் குழந்தை உயிரிழந்துள்ளது.

வாய்க்கால் நீரோடையில் விழுந்த குழந்தையை பழுகாமம் பிரதேசவைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர். எனினும், குழந்தை அதற்கு முன்பே உயிரிழந்ததாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பிரேதபரிசோதனைக்காககுழந்தையின்உடல்களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்கள் மதிப்பீடு தொடக்கம்

2024ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில்பரீட்சையின்விடைத்தாள்களைமதிப்பீடு செய்யும்பணிகள் எதிர்வரும் 08ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைவினாத்தாளின்மூன்று வினாக்கள் சமூக ஊடகங்களில் கசியப்பட்டிருந்தன.

இதனையடுத்து மாணவர்களின் பெற்றோர்கள் சிலர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுக்களைத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு அமைய பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.01.2025இல் வெளியிடப்பெற்றது